**செய்தி வெளியீடு எண்: 439** **13.07.2007**

<u>செய்தி வெளியீடு</u>

**29.06.2007 அன்று , சிவகங்கை நகராட்சியில் நடைபெற்ற வாகன குண்டு வெடிப்பில் படுகாயம் அடைந்த ஓட்டுநர் திரு பாண்டி அவர்களின் மருத்துவச் சிகிச்சைக்கு ரூ. 2 லட்சம் வழங்க, மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவு.**

----

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகராட்சியில் கடந்த 29.06.2007 அன்று வாகனத்தில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் அவ்வாகன ஓட்டுநர் திரு. பாண்டி படுகாயமடைந்து, வலது கால் துண்டிக்கப்பட்டும், இடது காலில் பலத்த காயம் ஏற்பட்டு பிளேட் வைத்தும் தொடர் அறுவை சிகிச்சைக்காக தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார்.

அபாய கட்டத்தில் இருக்கும் தன் கணவரை காப்பற்ற தொடர் மருத்துவ சிகிச்சைக்கு பணம் செலுத்த முடியாத நிலையில் தான் இருப்பதாக, திரு பாண்டியின் மனைவி திருமதி முத்துலெட்சுமி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அளித்த மனுவில், மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவி

வேண்டுமென்று விண்ணப்பித்திருந்தார், சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை பேரில், கால்களை இழந்துள்ள திரு பாண்டி த/பெ பெரிய கருப்பன், தொடர்ந்து மருத்துவ சிகிச்சை பெரும்வகையில், அவரது தொடர் மருத்துவச் செலவிற்காக, மனிதாபிமான அடிப்படையில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2,00,000 ( ரூபாய் இரண்டு இலட்சம் ) வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

,,,,,,,,,,,,

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.9**